அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

23 T I

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

**First Term Test - Grade 13 - 2018**

சுட்டெண் : ........................

அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

காலம் : 2 மணி

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக**
- ❖ **விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**
- ❖ **1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x ) இடுவதன் மூலம் காட்டுக.**
- ❖ **31 முதல் 50 வரையான வினாக்களுக்கு இவ்வினாத்தாளிலேயே விடையளிக்க.**
- ❖ **ஒரு விடைக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.**

- **1 தொடக்கம் 5 வரையான வினாக்களில் பிழையான கூற்றை தெரிவு செய்க.**

01. அரசியல் என்பதற்கு பொருந்துவது
   1. மக்கள் பணி எனும் பொதுச் சேவையைச் செய்தல்
   2. சமூகத்திட்டங்களை உருவாக்குதல் பாதுகாத்தல், திருத்தம் செய்தல்
   3. மரியாதையற்ற தீய செயல்களுக்கு மனிதனைத் தூண்டுதல்
   4. அருமையான வளங்களின் பகிர்வும் வேறாக்கமும் (ஒதுக்குதல்)
   5. அதிகார மற்றும் அரச தொடர்புகளைச் சீர் குலைத்தல் (........)

02. அரசியல் விஞ்ஞானம் தொடர்பாக முக்கியமாய் அமைவது
   1. 21ம் நூற்றாண்டில் முறைசார் ரீதியான கல்வி ஆரம்பித்தது.
   2. அரசறிவியல் பல்வேறு பிரிவுகளையும் கற்கின்ற கற்கை ஊடகமாக இருத்தல்
   3. எதிர்கால நலனுக்காக இறந்த கால அரசியல் பிரச்சினைகளைக் கற்றல்
   4. சிறந்த தொழில் சார் அரசியல் வாதிகளை உருவாக்கல்
   5. பிரசைகளின் அரசியல் நடத்தையைக் கற்றல். (........)

03. அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பதில் உள்ள பயன்கள்
   1. அரசியல் வகிபங்கை நிறைவேற்றுவதற்கு
   2. நடைமுறை அரசியலில் முறைகேடு மேற்கொள்ளப்படுகின்ற விதத்தைக் கற்பதற்கு
   3. அரசாங்கம் மற்றும் அதன் நடவடிக்கைகளை அறிந்து கொள்வதற்கு
   4. அரசியல் விடயங்கள் சம்பந்தமாக தீர்மானங்கள் மேற்கொள்வதற்கு
   5. பிரசைகளின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு (........)

04. பின்காலனித்துவ அரசுகளின் பண்புகளாவன
   1. பலமிக்க இராணுவ மற்றும் சிவில் நிர்வாகக்கட்டமைப்பொன்று காணப்பட்டமை
   2. சிவில் அரசியல் வாதிகளும் சிவில் அரசியல் நிறுவனங்களும் பலவீனம் அடைந்தமை
   3. ஒரே பாணியிலான அரசியல் பிரச்சினைகளினால் துன்புறல்
   4. இந்நாடுகளை பொருளாதார அபிவிருத்தி மிகவும் வேகமாக ஆக்கிரமித்துள்ளது.
   5. அரசியல் பரிவர்தனைகள் வெற்றிகரமாகவும் நிலைத்திருக்கக்கூடிய வகையிலும் நிகழவில்லை (........)

05. மாக்ஸிய வாதக் கட்டமைப்புக்கமைய சமத்துவம் பற்றிய எண்ணக்கரு சம்பந்தமாக சரியான கூற்றாக அமைவது.
   1. சமத்துவ எண்ணக்ருவை உற்பத்தி முறை உற்பத்தி மார்க்கங்களுக்கிடையில் காணப்படுகின்ற தொடர்புகளுக்கமையவே விளங்கிக் கொள்ள வேண்டும்.
   2. சமூக உடைமை (சோசலிஸ சமூகம்) காலப்பகுதியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுதவன் மூலம் சமத்துவம் ஏற்படும்.
   3. ஒரு சமூகக் காலப்பருவத்தில் காணப்படும் சமப்படுத்துவதற்கான அர்த்தம் (பொருள்) அதற்கு அடுத்த பருவத்தில் மாற்றமுறாது
   4. பூரண சமத்துவம் காணப்படுவது அரசற்ற தூய கம்யூனிஸ சமூகத்திலாகும்.
   5. யாதும் ஒரு அரசின் பிரசைக்கு அந்நாட்டின் ஆட்சிமுறைக்குள் உட்செல்வதற்கு (பங்குபற்றுவதற்கு) காணப்படுகின்ற சமமான உரிமை சமத்துவம் என அர்த்தம் (பொருள்) சொல்லப்படுகின்றது. (........)

❖ **06 - 11 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தொகுதியை தெரிவு செய்க.**

06. ஒற்றையாட்சி பண்புகளை உள்ளடங்கியுள்ள கூற்றுக்களின் சேர்மானமானது
A) அரசின் இறைமை அதிகாரம் ஒரு அதிகார மையத்தின் மூலம் (தேசிய மத்திய அரசாங்கம்) செயன்முறைப்படுத்துதல்
B) மத்திய தேசிய அரசாங்கத்தின் மூலம் கீழ் நிலை நிறுவனங்களைக் கலைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருத்தல்
C) ஆட்சி அதிகாரம் மத்தியில் இருந்து பிரதேச படைகளுக்கு பரவலாக்கப்பட்டிருத்தல்
D) பெரிய அரசுகளுக்கு மிகவும் பொருத்தமான ஆட்சிமுறையாக இருத்தல்
E) மத்திய அரசாங்கத்தினால் வலுக் குறைக்கப்பட்ட அதிகாரங்கள் மட்டும் மாகாண அரசுகளுக்கு இருத்தல்
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE (........)

07. சமஷ்டி (ஆட்சி) அரசாங்க முறைக்குப் பொருந்தும் சரியான கூற்றுக்களின் சேர்மானத்தைத் தெரிவு செய்க.
A) மாநில அரசாங்கங்களுக்கு யாப்பின் மூலமே அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.
B) வேற்றுமையில் தேசிய ஒற்றுமையைக் கட்டி எழுப்புதல் (வேற்றமையில் ஒற்றுமை காணல்)
C) ஒப்பந்தத்தின் மூலம் மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையில் அதிகாரத்தைப் பகிர்ந்து ஆட்சி புரிதல்
D) பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துதல்
E) வினைத்திறன் மிக்கதும், பலம் மிக்கதுமான அரசாங்கத்தை உருவாக்குதல்
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE (........)

08. அதிகார வேறாக்கம் (வலு வேறாக்கம்) தொடர்பாக சரியான கூற்றுக்களின் சேர்மானம்
A) இது மொண்டெஸ்கியூவின் எண்ணக்கருவாகும்.
B) மூன்று விதமாக இறைமை அதிகாரத்தை பாகுபடுத்தலாகும்.
C) அரசாங்க அதிகாரத்தை தடைப்படுத்துகின்ற ஒரு முறை
D) தன்னிச்சையான ஆட்சியாளர்கள் உருவாகுவதில் தாக்கம் செலுத்தும் ஒன்று
E) மக்கள் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை வளர்க்கின்ற ஒன்று
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE (........)

09. பாராளுமன்ற ஆட்சி முறையில் காணப்படும் பண்புகள் அடங்கிய கூற்றுக்களின் சேர்மானம்
A) சட்டத்துறையில் பெரும்பான்மையைப் பெற்ற கட்சியினதோ கூட்டமைப்பினதோ தலைவர் பிரதமராக தெரிவு செய்யப்படுவார்.
B) சட்டத்துறை, நிர்வாகத்துறை வெவ்வேறு தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படும்.
C) அரச தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள்
D) சட்டத்துயிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட கெபினட்டிற்கு நிர்வாக அதிகாரம் உரித்தாகும்.
E) பிரதமர் மற்றும் அமைச்சரவை கூட்டாக பாராளுமன்றுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும்.
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE (........)

10. ஜனாதிபதி முறையில் காணக்கூடிய சில பண்புகள்
A) சட்டத்துறை, நிர்வாகத்துறை தனித்தனியே தேர்ந்தெடுக்கப்படல்
B) ஒவ்வொரு நிறுவனத்திற்கும் யாப்பின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள சுதந்திரமான அதிகாரங்கள் உரித்தாதல்
C) நிர்வாகத்துறையை பதவி நீக்கம் செய்வதற்கு சட்டத்துறைக்கு முடியாதுள்ளமை
D) அரசின் தலைவர், மற்றும் அரசாங்கத்தின் தலைவர் என்ற பதவி இரண்டும் ஜனாதிபதிக்கு உரித்தாதல்
E) நியமன முறை (தெரிவு செய்யப்படும் முறை) காரணமாக நிர்வாகத்துறை நேரடியாக மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல கடமைப்பட்டுள்ளமை
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE (........)

11. மோதல் தீர்த்தல், சில அடிப்படைப்பண்புகளைக்கொண்டுள்ளது. இதன் பொருத்தமான கூற்றுக்களைக் கொண்ட சேர்மானம் யாது,
A) மோதலுடன் தொடர்புடைய அடிப்படைக்காரணிகளை வேருடன் அகற்றல்
B) மோதல் தரப்பினருக்கிடையில் புதிய தொடர்புகளை கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
C) மோதலின் வன்முறைத்தன்மையை அதிகரிப்பதற்கு உதவுதல் (உந்து சக்தியாய் இருத்தல்)
D) மோதல் தரப்பினருக்கிடையில் மீண்டும் வன்முறை தலைதூக்குவதற்கான சாத்தியங்களை நீக்குதல்
E) மோதல் தரப்பினரிடம் நேர்க்கனிய மனப்பாங்கை பதியவைத்தல்
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE (........)

❖ **12 – 15 வரை உள்ள வினாக்களில் இருந்து பிழையான கூற்றைத் தெரிவு செய்க.**

12. அரசியல் கட்சிக்குப் பொருத்தமாய் அமைவது
    1. அது சனநாயகத்தின் முக்கிய அடிப்படைக் கூறுகளாகும்.
    2. அதன் மூலம் (கட்சிகள் மூலம்) தேர்தல்களுக்கு வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு முன்னிறுத்தப்படுகின்றது.
    3. அதன் மூலம் அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் பிழையாக வழிநடாத்தப்படுகின்றனர்.
    4. அரச அதிகாரத்தைக் கைப்பற்றவே இது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (ஏற்படுத்தப்பட்டுள்ளது)
    5. இது அரசியல் சமூக மயமாக்கலுக்கு உதவுகின்றது. (........)

13. பொதுசன அபிப்பிராயம் தொடர்பான மிகப்பொருத்தமான கூற்று
    1. அது அரசியலில் மறைமுகமாக பங்குபற்றுகின்ற வழிமுறையாகும்.
    2. அது மனப்பாங்கின் வெளிப்பாடு
    3. குறித்த காரணி தொடர்பாக தகவல்கள் மிகவும் விளக்கமாக அமைகின்ற பொழுது பொதுசன அபிப்பிராயத்தின் தாக்கம் அதிகரிக்கும்.
    4. சர்வதிகார ஆட்சியில் பொதுசன அபிப்பிராயம் மறைந்து போகும்.
    5. மக்கள் அபிலாசைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள உதவுகின்றது. (........)

14. கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன்படி நூலுக்கும், நூலாசிரியருக்குமிடையிலான பொருத்தப்பாடு இல்லாத வாக்கியம் எது?
    1. K. C வெயார் - நவீன அரசியல்யாப்பு    2. C. N. இஸ்ரோன் - விசித்திர மனிதன்
    3. பிறைஸ் பிரபு – நவீன ஜனநாயகம்    4. ஸின் மாரி கெகென்னோ – தேசிய அரசுகளைக் கற்றல்
    5. சி. முவர் மார்டின் லிப்ஸம் - அரசியல் மனிதன் (........)

15. ஐக்கிய அமெரிக்கக் குடியரசுக்குப் பொருத்தமான கூற்றாய் அமைவது.
    1. காங்கிரசின் இரு சபைகளும் வாக்கின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டே அமைந்துள்ளது.
    2. தனியான தேர்தல் முலமே சனாதிபதி தெரிவு செய்யப்படுகின்றார்.
    3. காங்கிரசில் அங்கம் வகிக்காதவர்களையும் கபினட்டிற்கு நியமிக்கும் உரிமை சனாதிபதிக்கு உண்டு
    4. கபினட் செனட் சபைக்குப் பொறுப்பகுக் கூற வேண்டும்.
    5. யுத்தப் பிரகடனம் செய்யும் அதிகாரம் பிரதி நிதிகள் சபைக்கே உண்டு. (........)

- **16 முதல் 30 வரை வினாக்களுக்கு பொருத்தமான கூற்றக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

16. இலங்கைக்கு மிகவும் பொருத்தமான ஜனநாயக ஆட்சிமுறை எனக் கருதுவதற்கு போதிய காரணிகளை கொண்டிருக்கும் கூற்றுக்களின் சேர்மானம்.
    A பிரதிநிதித்துவ சனநாயகம், பாராளுமன்ற ஜனநாயகம், மக்கள் வாக்கின் மூலம் ஆட்சி மாற்றுதல் போன்றவை இலங்கை அரசியல் கலாச்சாரத்தில் இருக்கும் அதிபலம் வாய்ந்த பண்புகளாகும்.
    B இலங்கை பல்லின, மற்றும் பல்மத சமூகங்களைக் கொண்டிருத்தல்
    C இலங்கை மக்கள் ஜனநாயக ஆட்சி முறைமீது வைத்திருக்கும் நம்பிக்கை
    D இலங்கை மக்களிடம் காணப்படும் உயர் மட்ட அரசியல் அறிவு
    E அரசும் சிவில் சமூகமும் யுத்தமயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டமை
    1. ABCD    2. BCDE    3. ABDE    4. ACDE    5. ABCE    (........)

17. இலங்கை ஆட்சிமுறையில் காணப்படும் ஜனநாயகப் பண்புகள் உள்ளடங்கியுள்ள கூற்றுக்களின் சேர்மானத்தைத் தெரிவு செய்க.
    A ஆட்சி நடவடிக்கைகளின் போது நடைபெறுகின்ற துஷ்பிரயோகம் மற்றும் அதிகாரத்தை குறைத்துப் பிரயோகித்தல்.
    B சர்வஜன வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயகம்
    C அனேக சிறிய கட்சிகளை உள்ளடக்கிய ஆதிபத்திய இரு கட்சிமுறை.
    D அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்
    E மக்கள் வாக்கின் மூலம் நிறுவப்படுகின்ற சட்டத்துறை
    1. ABCD    2. BCDE    3. ABDE    4. ACDE    5. ABCE    (........)

18. பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்துடன் தொடர்புடைய கூற்றுக்களின் சேர்மானத்தைத் தெரிவு செய்க?
    A- மேலைத்தேய கல்வி முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது
    B- நெல் விவசாயிகளுக்கு மானிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது
    C- வணிகப் பெருந்தோட்டப் பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
    D- மேற்கத்தேய ஜனநாயக அரசியல் நிறுவனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
    E- மேலைத்தேய கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.
    1. ABCD    2. BCDE    3. ABDE    4. ACDE    5. ABCE    (........)

19. 1833 கோல்புரூக், கமரன் ஆணைக்கழுவின் மூலம் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

A இராஜகாரிய முறையை நீக்கியமை

B சேனாதிபதியின் நிலையை மேலும் பலப்படுததியமை

C நிர்வாக, சட்ட சபைகளை நிறுவியமை

D அரச வர்த்தக ஏகபோக உரிமையை நீக்கியமை

E இலங்கையை ஒற்றை நிர்வாக முறையின் கீழ் கொண்டுவந்தமை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

20 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் பண்புகளுடன் பொருந்தும் கூற்றுக்களடங்கிய சேர்மானம்.

A தேசாதிபதி

B அரச உத்தியோகத்தர்கள்

C மந்திரிசபை (அமைச்சரவை)

D நிர்வாகக் குழு

E மட்டுப்படுத்தப்பட்ட (வரையறை)வாக்குரிமை சட்டம்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

21 சோல்பரி யாப்பு வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டாலும் சிலபகுதிகள் (அங்கங்கள்) அம்மாதிரியிலிருந்து மாறுபட்டுள்ளது. அதற்குத் தாக்கம் செலுத்திய காரணங்களைக் கொண்ட கூற்றுக்களின் சேர்மானமாய் அமைவது.

A சோல்பரி யாப்பு எழுதப்பட்டடிருந்தமை

B ஒப்பீட்டு ரீதியாக அதிகாரம் குறைவாக இருந்தமை

C யாப்பு வவரண அதிகாரம் குறைவாக இருந்தமை

D இலங்கை பல்லின பல்மத சமூகம் என்பதை ஏற்றமை

E இலங்கையை குடியரசாக்குதல்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

22. 1947 சோல்பரி யாப்பின் மூலம் சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக பல ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதற்கு பொருத்தமான கூற்றுக்களின் சேர்மானத்தை எடுத்துக் காட்டுக.

A 29(2) சரத்து

B பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதி

C பிரதிநிதிகள் சபைக்கு நியமன அங்கத்தவர்களை நியமித்தமை

D அரசியல் யாப்பு நீதிமன்றமொன்றை நிறுவியமை.

E செனட் சபையை நிறுவியமை

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

23. சோல்பரி யாப்பின் கீழ் பொதுச் சேவை (அரசசேவை) ஆணைக்குழுவின் சுதந்திரத்தைக் கருததில் கொண்டு உட்படுத்தப்பட்டிருந்த ஏற்பாடுகள்

A- பாராளுமன்றின் எந்தவொரு அங்கத்தவரையும் அரசாங்க சேவை ஆணைக்கழுவிற்கு நியமிக்க முடியாமை

B – வேறு பதவி வகித்த ஒருவர் ஆணைக் குழுவிற்கு நியமிக்கப்பட்டால் அவர் தனது பதவியிலிருந்து விலக வேண்டி இருப்பது.

C – சேவைக்காலம் முடிந்ததும் மீண்டும் பதவியில் அமர்த்த முடியாமை

D – ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் நிர்வாகித்தல்

E – பதவிநீக்கம் செய்கின்ற பொழுது குறித்த காரணங்களை முன்வைத்த பின்பே தேசாதிபியால் பதவிநீக்கம் செய்கின்ற நிலை

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

24. 1972 ம் யாப்புக்கமைய சரியான கூற்றுக்களின் சேர்மானம்

A - அரசின் உத்தியோகபூர்வ நாமம் மாற்றப்பட்டது.

B – பெரிய பிரித்தானியாவுடன் அது வரைக்கும் இருந்த சகல யாப்புரீதியான தொடர்புகளையும் கைவிட்டனர்.

C – சிங்கள மொழி மற்றும் புத்த சமயம் ஆகியவற்றிற்கு அரசமொழி, அரசமதம் என்ற நிலையை வழங்கினர்

D - இலங்கையை சுதந்திரமும், தன்னாதிக்கமும், இறைமையும் கொண்ட சுதந்திர குடியரசாக பிரகடனப்படுத்தினர்.

E – ஓர் மன்ற முறையை அறிமுகப்படுத்தினர்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

25. 1972 ம் யாப்பின் கீழ் தேசிய அரசுப்பேரவை சட்டவாக்க அதிகாரம் படைத்த ஏக நிறவனமானது. இக்கருத்துடன் பொருந்தக்கூடிய கூற்றுக்களின் சேர்மானத்தைக் குறிப்பிடுக.

A- யாப்பின் 5ம் சரத்தின்படி இலங்கைக் குடியரசின் அரச அதிகாரத்தைப் பயன்படுத்துகின்ற மீயுயர் கருவியாக தேசிய அரசுப்பேரவை இருக்கின்றமை.

B- 44 ம் சரத்துக்கமைய தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரம் மீயுயர்தன்மை கொண்டிருக்கின்றமை

C- 39 (2) சரத்திற்கமைய தேசிய அரசுப் பேரவை மூலம் நிறைவேற்றப்படும் எந்தவொரு சட்டத்தினதும் செல்லுபடியாகும் தன்மை பற்றி கேள்விக்குள்ளாக்க எந்தவொரு நீதிமன்றத்திற்குமோ அல்லது வேறு எந்தவொரு நிறுவனத்திற்குமோ அதிகாரம் கிடையாது இருக்கின்றமை.

D- 30 (2) சரத்தின்படி சகல அரச சேவை நியமனங்கள் அரசியல் நிர்வாகத்தின் தலையீடு இன்றி நடைபெறல்.

E- 45 ம் சரத்தின்படி சட்டத்துறைக்கு உரித்தான அதிகாரத்தை கைவிடவோ (துறக்கவோ) ஒப்படைக்கவோ, கையளிக்கவோ (பிறருக்கு உரித்தாக்கவோ) முடியாதிருத்தல்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

26. 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழ் தேசிய அரசுப்பேரவை

A – மக்கள் பிரதிநிதிகளை மாத்திரம் கொண்டுள்ளது.

B – அரசியல் யாப்பு நீதிமன்றத்திற்கிருக்கும் நீதிப்புனராய்வு அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

C – அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்ததுகின்ற மீயுயர் கருவியாகும்.

D – பாராளுமன்ற இறைமை என்ற அடிப்படைக் கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டு நிறுவப்பட்டது.

E – ஓரங்க சபையைக் கொண்டது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

27. 1972 ம் யாப்பின் கீழ் பெயரளவு நிர்வாகம்

A- பிரதமர் மூலம் நியமிக்கப்படுவார்

B- அரசின் தலைவர்

C- சட்டத்திற்கு அனுமதி அளிக்கும் மற்றும் நிராகரிக்கும் அதிகாரம் கொண்டவர்

D – அதிகாரம், மற்றும் பணிகள் (கடமைகள்) பொருத்தவரையில் பலம் வாய்ந்த பதவியாகக் காணப்படவில்லை.

E – பதவிக்காலம் 4 வருடங்கள்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

28. 1972 ம் 1ம் குடியரசு யாப்பின் கீழ் பிரதமரும் அமைச்சரவையும் இராஜினாமாச் செய்ததாக கருதப்படுவது.

A பொதுத் தேர்தலின் பின்னர்

B – நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றிய பின்னர்

C- வரவு செலவுத்திட்டம் தோல்வியடைந்த பின்பு

D – சிம்மாசன பிரசங்கம் தோல்வியடைந்த பின்னர்

E – குற்றப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பின்னர்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

29. 1972 ம் யாப்பின் படி நீதித்துறைக் கட்டமைப்பில் மாற்றங்கள் சில மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய பொருத்தமான கூற்றுக்களின் சேர்மானமாய் அமைவது.

A கோமரைக் கழகத்தின் மேன்முறையீட்டு அதிகாரததை நீக்கல்

B மேன் முறையீட்டு நீதி மன்றம் நிறுவப்பட்டது.

C 1973 ஆம் ஆண்டு 44 இலக்க நீதி தீர்த்தல் சட்டத்தின் மூலம் உயர் நீதி மன்றம் நிறுவப்பட்டது.

D உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஒய்வு பெறும் வயதெல்லை 63 ஆக தீர்மானிக்கப்பட்டது.

E நீதிச்சேவை ஆலோசனை சபைக்குப்பதிலாக நீதி சேவை ஆணைக்குழு நிறுவப்பட்டது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

30. 1972 ம் முதலாம் குடியரச யாப்பின் கீழ் அதற்குரிய பொருத்தமான கூற்றுக்களின் சேர்மானமாய் அமைவது.

A மக்கள் இறைமை அதிகாரம் தேசிய அரசுப் பேரவையில் மத்திய மயப்படுத்தப்பட்டுள்ளது. (வலுக்குவிப்பு)

B – அடிப்படை உரிமைகள் பற்றிய எற்பாடுகள் அடங்கியுள்ளன.

C - ஜனாதிபதிக்கு பூரண அதிகாரம் உரித்தானது

D - பிரதமர் அரசின் தலைவர்

E - அரசியல் அமைப்பு நீதிமன்றம் நிறுவப்பட்டது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE (........)

31. கீழ்வரும் கூற்றுக்களில் விளக்கப்பட்டுள்ள அரசியல் நிறுவனங்கள் இரண்டினை இனங்கண்டு பெயரிடுக.
 1. சகல சமூக நிறுவனங்களையும் விட உயர்வான அதிகாரம் கூடிய அரசியல் நிறுவனம்
 2. அரசின் விருப்பத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்

1. ..........................................................................................................................................................

2. ..........................................................................................................................................................

32. கீழ்வரும் கூற்றுக்களின் மூலம் கருதப்படும் அரசறிவியல் ஆய்வு அணுகுமுறைகள் இரண்டினையும் பெயரிடுக.
 1. "அரசியல் உலகு தொடர்பாகக் காணப்படும் பிரதான முரண்பாடுகளை வெளிப்படுத்தி அவற்றினை விவாதிக்கின்றது"
 2. "உற்பத்தி, சந்தைப்படுத்தல், தேசிய வருமானம் என்பன அரசாங்கத்தின் கொள்கையோடு தொடர்புபடும் விதத்தினை ஆராய்கின்றது"

1. ..........................................................................................................................................................

2. ..........................................................................................................................................................

33. அரசறிவியல் பாடப்பரப்பிற்கு அமைய கீழ்வரும் எண்ணக்கருக்களை அடையாளம் கண்டு பெயரிடுக.
 1. "சமூகத்தின் அரசியல் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் பிரஜைகளின் அரசியல் நடத்தைகள், அரசாட்சிச் செயற்பாடுகள் ஆகியவற்றை ஒழுங்கமைக்கும் பிரதான சாதனம்"
 2. "எந்தவொரு சமூகத்திலும் அரசியலின் பிரதான அம்சங்களான அரசு அரசாங்கம், நீதிமன்றம், பாராளுமன்றம் போன்றன காணப்படும்."

1. ..........................................................................................................................................................

2. ..........................................................................................................................................................

34. பின்வரும் கூற்றுக்களில் கூறப்பட்டுள்ள அரசியல் நிறுவனங்களை முறையே எழுதுக.
 1. அங்கத்துவ அட்டை பெற்ற அங்கத்தவர்களைக் கொண்ட அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பொதுவான பொருளாதார அரசியல் கொள்கைகளுடன் ஒழுங்கமைக்கப்பட்ட மனிதக் குழு"
 2. அரசுக்கு வெளியில் சுயாதீனமான பிரஜைகள் தமது பொது நோக்கங்களுக்காக ஒன்றிணைந்து ஒற்றுமையாகச் செயற்படும் சமூக வாய்ப்பாகும்.

1. ..........................................................................................................................................................

2. ..........................................................................................................................................................

35. கீழ்வரும் இரு கூற்றுக்களிலும் இரு அரசியல் முறைகளில் காணப்படும் பண்புகள் விளக்கப்பட்டுள்ளன. அவ்விரு அரசியல் முறைகளையும் இனங்கண்டு முறையை எழுதுக.
 1. இவ்வரசியல் முறையில் அரசாங்கப் பதவிகளுக்கு நியமனம் பெறுவதற்கு போட்டித்தன்மை காணப்படும். நீதியும் நியாயமுமாக நடைபெறும் தேர்தலில் தமது தலைவர்களை தெரிவு செய்ய பிரஜைகள் கலந்து கொள்வர்
 2. அரசின் உயரிய தன்மை, எதேட்சையதிகாரம், இனவாதம் இராணுவவாதம் என்பவற்றை அடிப்படையாக்க கொண்ட அரசியல் முறையாகும்.

1. ..........................................................................................................................................................

2. ..........................................................................................................................................................

36. சமூக ஒப்பந்தவாதம் இரு சமூக முறைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அந்த சமூக முறை இரண்டையும் பெயரிடுக.

1. ..........................................................................................................................................................

2. ..........................................................................................................................................................

37. அரச அதிகாரத்தை பகிர்தல் மற்றும் மத்தியமயப்படுத்தல் அடிப்படையில் அரசியலமைப்பினை இரு வகைப்படுத்தலாம். அவை இரண்டும் எவை?

1. ..........................................................................................................................................................

2. ..........................................................................................................................................................

38. பாராளுமன்ற அரசயிலமைப்பு முறையில் நிறைவேற்றுத் துறை இரு பிரிவுகளாகும். அவ்விரண்டையும் பெயரிடுக.

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

39. சமூக அரசியல் முறையில் நிலையாக காணப்படும் முரண்பாடுகளின் இயல்புக்கு ஏற்ப அவற்றை மூன்றாக வகைப்படுத்தலாம். அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

40. எதேட்சதிகார ஆட்சிமுறை உருவாகுவதை தடுப்பதற்கு ஜனநாயக அரசாங்கத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகள் இரண்டு தருக.

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

41. கோல்புரூக் ஆணைக்கழுவின் சிபாரிசின் படி 1833 இல் உருவாக்கப்பட்ட சட்டவாக்கக் கழகத்தின் இரண்டு வகையையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் கூறுக.

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

42. 1833, 1911, 1920 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்த அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் கீழ் சட்டவாக்கக் கழகம் இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. அவ்விரு வகையும் யாவை?

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

43. காலனித்துவ காலத்தில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் படி முதன் முதலாக உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்கள் அதிகமான மற்றும் முதலில் தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்களை முறையே பெயரிடுக.

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

44. காலனித்துவ ஆட்சியில் அரசயிலமைப்பு சீர்திருத்ததங்களின் மூலம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார, மற்றும் அரசியல் முறையினை குறிப்பிடுக.

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

45. 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட சட்ட சபை உறுப்பினர்களில் மூவர் அரசாங்க உத்தியோகத்தர்களாவர், ஏனையோர் தெரிவு செய்யப்பட்ட முறையை எண்ணிக்கையையுடன் தருக.

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

46. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்ட செனட் சபைக்கு இரண்டு முறையில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவ்விரு முறைகளையும் குறிப்பிட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

47. சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கு சோல்பரி அரசியலமைப்பில் காணப்பட்ட ஏற்பாடுகள் இரண்டு தருக.

1. ..........................................................................................................................................................................

2. ..........................................................................................................................................................................

48. 1947 சோல்பரி மற்றும் 1972 அரசியலமைப்பின் கீழ் நாம நிர்வாகிகளாக செயற்பட்டவர்களை முறையே எழுதுக.

1. ..........................................................................................................................................................................

2. ..........................................................................................................................................................................

49.
1. இலங்கைக்கு அடிப்படை மனித உரிமைகளை அறிமுகப்படுத்திய முதல் அரசியலமைப்பு எது?
2. இலங்கையில் மக்கள் பிரதிநிதிகளை மாத்திரம் கொண்ட சட்ட சபையை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு எது?

1. ..........................................................................................................................................................................

2. ..........................................................................................................................................................................

50. 1972 அரசியல் யாப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விசேட அரசியலமைப்பு நிறுவனங்கள் இரண்டினை பெயரிடுக.

1. ..........................................................................................................................................................................

2. ..........................................................................................................................................................................

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

23 | T | II

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

**First Term Test - Grade 13 - 2018**

சுட்டெண் : ……………………

அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

காலம் : 3 மணி

**அறிவித்தல்.**

- **இவ் வினாப்பத்திரம் A,B என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **மொத்தமாக 10 வினாக்களை உள்ளடக்கியது.**
- **ஒரு பகுதியில் குறைந்த பட்சம் இரு வினாக்களையாவது தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**
- **ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.**

## A பகுதி

01. பின்வருவனவற்றை விளக்குக.
    1. கல்வித்துறையாக அரசியலைக் கற்றல்
    2. அரசறிவியலின் பாடப்பரப்பு மாறும் தன்மை கொண்டது. (10 x 2 = 20)

02. பின்வருவனவற்றை விபரிக்குக.
    1. அரசியல் ஆய்வுக்கு பயன்படுத்தப்படும் நடத்தைவாத அணுகுமுறை
    3. அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக் குழுக்களுக்கும் இடையிலான தொடர்பு (10 x 2 = 20)

03. "அரசு சமூகத்தில் காணப்படும் ஒரு உயர் தாபனமாகும்" என்பதை விபரிக்குக. (20)

04. பாராளுமன்ற ஆட்சிமுறை மற்றும் ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்பில் கீழ்வரும் விடயங்களை தெளிவுபடுத்துக.
    1. அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை 2. ஜனநாயக அரசாங்க முறை என்ற வகையில் (10 x 2 = 20)

05. கீழ் வரும் அரசியல் கருத்தியல்கள் இரண்டு தொடர்பில் கருத்துரைக்குக.
    1. சமூக ஜனநாயகவாதம் 2. பாஸிஸவாதம்
    3. மதசார்பின்மைவாதம் 4. குடியரசுவாதம். (10 x 2 = 20)

## பகுதி - B

06. இலங்கையின் 1833 ஏற்படுத்தப்பட்ட கோல்புரூக் கமரன் சீர்திருத்தம் புதிய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியது இது தொடர்பில் கருத்துரைக்குக. (10 x 2 = 20)

07. 1931 டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் முதன் முறையாக இலங்கையர்களுக்கு பொறுப்புடன் கூடிய அரசயிலமைப்பொன்று வழங்கப்பட்டது. இது தொடர்பாக விபரிக்குக. (10 x 2 = 20)

08. 1947 டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் படி பின்வருவனவற்றை விளக்குக.
    1. பாராளுமன்றத்தின் அமைவும் மேன்மையும்.
    2. சிறுபான்மையின் உரிமைகளை பாதுகாப்பதற்கு இருந்த ஏற்பாடுகள். (10 x 2 = 20)

09. 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழ் பின்வரும் விடயங்களை விபரிக்குக.
    1. அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான எற்பாடுகள்
    2. தேசிய அரசுப் பேரவையின் பணியும் நிலைமையும். (10 x 2 = 20)

10. 1947 சோல்பரி மற்றும் 1972 அரசியலமைப்பின் கீழ் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
    1. நாம நிர்வாகியின் நிலைமை 2. அரசாங்க தலைவரின் நிலைமை (10 x 2 = 20)

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# முதலாந் தவணைப் பரீட்சை - 2018
# அரசியல் விஞ்ஞானம் - Political Science - தரம் -13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 - 3 | 06 - 5 | 11 - 4 | 16 - 1 | 21 - 1 | 26 - 3 |
| 02 – 1 | 07 – 1 | 12 – 3 | 17 - 1 | 22 - 5 | 27 - 3 |
| 03 - 2 | 08 – 5 | 13 – 3 | 18 - 3 | 23 - 5 | 28 - 2 |
| 04 - 4 | 09 – 3 | 14 – 2 | 19 - 3 | 24 - 4 | 29 - 2 |
| 05 - 3 | 10 – 4 | 15 – 5 | 20 - 1 | 25 - 5 | 30 – 3 |

31. (1) அரசு (2) அரசாங்கம்

32. (1) தத்துவார்த்த அணுகுமுறை (2) அரசியல் பொருளாதார அணுகுமுறை

33. (1) அரசியல் கருத்தியல் (2) அரசியல் நிறுவனம்

34. (1) அரசியல் கட்சி (2) சிவில் சமூகம்

35. (1) தாராண்மை ஜனநாயக அரசு (2) பாஸிஸவாத அரசு

36. (1) இயல்புநிலை சமூகம் (2) சிவில் சமூகம்

37. (1) சமஷ்டி அரசியலமைப்பு (2) ஒற்றையாட்சி அரசியலமைப்பு

38. (1) நாம நிர்வாகம் (2) அமைச்சரவை நிர்வாகம் (உண்மை நிர்வாகம்)

39. எளிய வகைப்படுத்தல், செயற்பாட்டுவாத வகைப்படுத்தல், அரசியல் வகைப்படுத்தல்

40. அரசியலமைப்பு வாதம் (யாப்புறு வாதம்), அதிகார வேறாக்கம், சட்டவாட்சி, மனித உரிமைகள்

41. (1) உத்தியோகப்பற்றுள்ளோர் - 9 (2) உத்தியோகப் பற்றற்றோர் - 6

42. (1) உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர்கள் (2) உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள்

43. (1) 1922 மனிங் அரசியலமைப்பு சீர்திருத்தம் (2) 1910 குரு மக்கலம் சீர்திருத்தம்

44. (1) தனியார் முதலாளித்துவ பொருளாதார முறை (2) பாராளுமன்ற ஜனநாயக அரசியல் முறை

45. (1) மகா தேசாதிபதியின் நியமமனம் - 8 (2) தேர்தலில் - 50

46. (1) பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் - 15

    (2) பிரதமரின் ஆலோசனையின்படி மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டோர் - 15

47. (1) 29 (2) ஆம் உறுப்புரை (2) பல்லங்கத்தவர் தேர்தல் தொகுதி
    (3) நியமன அங்கத்தவர் 6 பேர் மகாதேசாதிபதியினால் பிரதிநிதிகள் சபைக்கு நியமிக்கப்பட்டமை
    (4) செனட் சபைக்கு மகாதேசாதிபதியினால் 15 பேர் நியமிக்கப்பட்டமை
    (5) அரச சேவை ஆணைக்குழு (6) நீதிச் சேவை ஆணைக்குழு.

48. (1) 1947 – மகாதேசாதிபதி (2) 1972 - ஜனாதிபதி

49. (1) 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பு (2) 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பு

50. (1) அரசியலமைப்பு நீதிமன்றம் (2) அரச சேவை ஆலோசனைச் சபை

    (3) அரச சேவை ஒழுக்காற்றுச் சபை (4) நீதிச் சேவை ஆலோசனைச் சபை
    (5) நீதிச் சேவை ஒழுக்காற்றுச் சபை விடைகள்

# LOL.lk
## BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**